(இ) ஆனல் இதுகுறித்து நூலக ஆணைக் குழுவில் தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடமாடும் நூல் நிலையம் ஏற்படுத்த நூலக ஆணைக் குழுவின் நிதி நிலைமை சரியில்லாத தால் இத் தீர்மானத்தைச் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே இப்போது நகரங்களில் இல்லாதவர்கள், மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் இருப்பவர்களும் பொது ரீதியான நூல்களைப் படிப்பதற்குச் சிரமப்படுகிருர்கள். அது கிடைப்பது இல்லை. ஆகவே, அந்த ஆலோசனையைக் கனிவோடு கவனித்து, அப்படிப்பட்ட நூலக நிலையங்களை வடார்க்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட மக்கள் நலன் கருதி நடமாடும் நூலகங்கள் ஏற்பாடு செய்வது மிக இன்றியமையாதது. ஆனல் அந்த மாவட்டத்திலிருந்து அந்தக் கோரிக்கை வந்தபோது, வடார்க்காடு மாவட்ட நூலக ஆணைக் குழுவிடத்தில் போதுமான நிதி வசதியில்லை. நூலகக் குழுக்களின் நிதி வசதியைச் சரிக்கட்டத் தான் அண்மையில் மூன்று பைசாவிலிருந்து செஸ்ஸை ஐந்து பைசா என்று ஆக்கியிருக்கிருேம். அதன்மூலம் அரசாங்கம் தருகிற ஈட்டுத் தொகையும் அதிகமாக இருக்கும். இதனல் நிதி நிலைமைகள் சரிப்படும். ஆகவே, வடார்க்காடு நூலக ஆணைக் குழுவால் இந்தத் திட்டம் எளிதில் நிறைவேற்றி வைக்கப்படலாம். அதற்கான முயற்சி எடுக்கப்படும்.

*244 *Q*.—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether there is any proposal to sanction adequate amounts to all high school libraries in Hosur and Denkanikota taluks to purchase Telugu books ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :
(அ) & (இ) இல்லை. இக் கோரிக்கை தனியாகப் பரிசீலிக்கப்படும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, there is a large demand for Telugu books in the libraries under the Local Library Authorities in Hosur and Denkanikota taluks. We have represented the matter to the District Educational Officer and the Collector there but they have been repeatedly saying that they have no funds for the last so many years. So, may I know whether the Government will be kind enough to make separate arrangements to provide books ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தெலுங்கு மாணவர்கள் பயிலுகிற பள்ளியில் தெலுங்கு நூல்கள் வாங்கி வைக்கப்பட வேண்டியது இன்றியமையாததுதான். அந்தக் கோரிக்கை இப்போது பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றிக் கல்வித் துறை தனியாக நடவடிக்கை எடுக்கும்.

குழந்தைகளுக்கான நூல்கள்.

*245 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குழந்தைகளுக்கான சிறந்த நூல்களை எழுதுவோருக்குப் பரிசு வழங்க மத்திய அரசு ஏதேனும் உதவித் தொகை வழங்குகிறதா ?

(இ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் வழங்கி வருகிறது ?

(உ) இப் பரிசுகள் 1971–72-ல் யார் யாருக்கு வழங்கப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் இலக்கியப் பரிசுப் போட்டி நடத்தி வருகிறது.

(இ) பரிசுத் தொகை ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

(உ) 1971–72-ம் ஆண்டு நடைபெற்ற 16-வது தேசீயக் குழந்தைகள் இலக்கியப் பரிசுப் போட்டியில் திரு. கல்வி கோபாலகிருட்டிணன் அவர்கள் எழுதிய "கானகக் கன்னி" என்னும் நூல் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கான பரிசுத் தொகை ரூ. 1,000 தேசீயக் கல்வி ஆய்வு பயிற்சிக் கழகத்தினால் அளிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, குழந்தை நூல் எழுத்தாளர்களுக்கு நம்முடைய மாநில அரசு எந்தெந்த வகையில் ஊக்கம் அளித்து வருகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டுதோறும் மாநில அரசாங்கத்தின் சார்பாகவும், பரிசுப் போட்டிகள் மூலமாகவும் புத்தகங்கள் எழுதுகிறவர்களுக்கு பரிசுகள் நல்கி வருகிறோம். அதிலே குழந்தைகள் எழுதும் புத்தகங்களுக்கும் பரிசுகள் இருக்கின்றன. 20—25 பரிசுகள் பல்வேறு தலைப்புகளின் வாயிலாக அளிக்கப்படுகின்றன. முன்பு ரூ. 1,000 தான் பரிசு வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு முதல் பரிசு ரூ. 2,000 என்றும், இரண்டாம் பரிசு ரூ. 1,000 என்றும் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.